**முதன்மை சார்பு நீதிமன்றம், கரூர்.**

முன்னிலை–திருமதி.கே.எல். பிரியங்கா, பி.ஏ.பி.எல்.,(Hons)

முதன்மை சார்பு நீதிபதி, கரூர்.

2026 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 31 ஆம் நாள் வெள்ளிக்கிழமை

**அசல் வழக்கு எண். 747/2022**

**(CNR.NO.TNKR03-001408-2022)**

திரு. A. செந்தில்குமார் ....வாதி

//எதிர்//

1. திரு. தங்கமுத்து
2. திருமதி. தெய்வானை
3. திரு. திருமூர்த்தி

.....பிரதிவாதிகள்

இந்த வழக்கு 31.07.2026 ம் தேதியன்று என் முன்பாக விசாரணைக்காக வந்த போது, வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.D. நாகராஜன்அவர்கள் ஆஜராகியும், 1 மற்றும் 2 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. K. சுப்பிரமணியன் அவர்கள் ஆஜராகியும், 3 வது பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. A.சுரேந்திரன் அவர்கள் ஆஜராகியும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

**தீர்ப்புரை**

தாவா வாதிக்கு ஆதரவாகவும், பிரதிவாதிக்கு எதிராகவும் தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை பிறப்பிக்கக்கோரி, வாதிக்கு 1 மற்றும் 2 பிரதிவாதிகள் வழக்கு தொகை ரூ.4,57,025 யும், மேலும் அசல் தொகைக்கு வழக்கு தாக்கல் செய்த நாளிலிருந்து தொகை முழுவதும் செல்லாகும் நாள் வரை மாதம் ஒன்றுக்கு ரூ.100 க்கு ரூ.2.10/– வீதம் வட்டி செலுத்த முதல் நிலை தீர்ப்பாணை பிறப்பித்திடவும், அவ்வாறு 1 மற்றும் 2 பிரதிவாதிகள் வழக்கு தொகை செலுத்த தவறினால் வழக்குச்சொத்தினை பொது ஏலத்தில் விற்பனைக்கு கொண்டுவந்து அதன் மூலம் பொது ஏலத்திற்கு விடுவதற்கு இறுதி நிலை தீர்ப்பாணை நிறைவேற்றிடவும் தீர்ப்பாணை பிறப்பித்திடவும், மேலும் தாவா சொத்தினை பொறுத்து சொத்துரிமை மாற்றுச்சட்டம் பிரிவு 55 (1) (f) ன் கீழ்

பொருட்பிணை பொருட்பு பொறுத்து (Charge) பாத்தியத்துடன் 1 மற்றும் 2 பிரதிவாதிகள், வாதிக்கு செலுத்தும் வகையிலும் தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை வழங்கியும், தாவா சொத்துக்களை பொறுத்து 1 மற்றும் 2 பிரதிவாதிகளோ அவரது முகவர்களோ அல்லது சார்பற்றுனர்களோ எவ்விதமான சொத்து மாற்றாக்க ஆவணங்களும் ஏற்படுத்த கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்க கோரியும் வழக்கின் செலவு தொகைகளை 1 மற்றும் 2 பிரதிவாதிகள் வாதிக்கு வழங்க கோரியும் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

Trial not ready. Already sufficient time given. Plaintiff called absent. Suit is dismissed for default.

2026 ம் ஆண்டு ஜூலை திங்கள் 31–ம் நாளன்று இந்த திறந்த நீதிமன்றத்தில் அவையறிய தீர்ப்புரை பகரப்பட்டது.

K L PRIYANGA Digitally signed by K L PRIYANGA

**முதன்மை சார்பு நீதிபதி,**

**கரூர்.**